**O.S.No. 387/2019**

**PW 1 :** பிரபு தேதி 18.3.2026

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

2ம் பிரதிவாதியின் கணவர் எப்போது இறந்துவிட்டார் என்றால் 14.5.2010 ல் இறந்துவிட்டார். பின்னிட்டு 2ம் பிரதிவாதியும் 3ம் பிரதிவாதியும் எங்கு குடியிருந்தார்கள் என்றால் என் சித்தப்பா வி கே செந்தில்சுப்பிரமணியம் அவர்கள் வீட்டில் குடியிருந்தார்கள். என் சித்தப்பா வீடும் என் பெரியப்பா வீடும் ஈரோடு டவுனில் ஆக்ஸ்போர்ட் ஹோட்டல் எதிரில் ஒரே காம்பவுண்டில் குடியிருந்தார்கள். தாவா சொத்து லக்காபுரத்தில் உள்ளது. என் சித்தப்பா இறந்த தேதியில் 3ம் பிரதிவாதியின் வயது என்ன என்றால் 12 ம் வகுப்பு படித்து முடித்திருந்தார். ஈரோடு டவுனில் இருந்து லக்காபுரம் சுமார் 8 கி மீ தூரத்தில் உள்ளது. 2010 க்கு பின்னிட்டு 2 மற்றும் 3 பிரதிவாதிகள் கூட்டாக அனுபவிக்க முடியாது என்பதற்காக தன்னுடைய பங்கை விற்பனை செய்ய முயற்சித்தார்களா என்றால் இல்லை. 2010 க்கு பின்னிட்டு தன்னால் சொத்தை அனுபவிக்க இயலாது என்றும் சொத்தை விற்க பல இடங்களில் முயற்சி செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு விற்க வந்த போது கூட்டு பங்குதாரர்கள் கிரையம் செய்து கொள்ளும் படி கேட்டார்கள் என்றும் அதற்கு நாங்கள் யாரும் முன் வரவில்லை என்றால் சரியல்ல எங்களிடம் அவ்வாறு கேட்கவில்லை. நான் **BE mechanical engineering** படித்திருக்கிறேன். **Engineering** தொழிலுக்கு நான் செல்லவில்லை. பெட்ரோல் பங்க் வைத்திருக்கிறேன் தோட்டம் உள்ளது. என் சித்தப்பா இறந்த போது அவருடைய மகன் மைனராக இருந்ததால் சொத்தை

பராமரிக்க இயலாது என்பதால் விற்பனை செய்ய முடிவு செய்திருந்தார்கள் என்றால் சரியல்ல என்றும் நான் 2014 ல் இருந்தே நான் பல வித வழக்குகளை தாக்கல் செய்து பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு நடத்தி கொண்டு வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தை விற்க வேண்டும் என்ற கட்டாயத்தில் 9 மற்றும் 10 பிரதிவாதிகளிடம் இருந்து உரிய மறு பயன் பெற்று கொண்டு கிரைய பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. உரிய மறு பயன் பெற்று கொண்டு கிரையம் எழுதி கொடுத்திருப்பதால் அந்த கிரையத்தை ஆட்சேபணை செய்ய எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு 2 மற்றும் 3 பிரதிவாதிகளை பொறுத்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.